4. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, (1) இன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இந்த மூன்றாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :

1. திரு. சா. கணேசன்
2. டாக்டர் க. காஞ்சனா
3. திரு. வே. தங்கபாண்டியன்
4. திரு. கே. அர்ஜுனன்
5. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்
6. திரு. கோ. பூவராகன்

5. சட்டமுன் வடிவுகள் (அறிமுகம்)

(அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) பச்சையப்பன் அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப் பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1990.